www.Padasalai.Net www.CBSEtips.in

FM
12 - ஆம் வகுப்பு

# முதல் இடைப் பருவத் தேர்வு – 2023

## கணக்குப்பதிவியல்

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 45

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10 X 1 = 10

1. நிலை அறிக்கை ஒரு
   அ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
   இ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு ஈ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு
2. கீழ்க்கண்ட செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு தொடர்பான எந்த விவரம் மொத்தக் கடனீந்தோர் கணக்கிற்கு மாற்றப்படுகிறது?
   அ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டின் தொடக்க இருப்பு
   ஆ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டின் இறுதி இருப்பு
   இ) அவ்வாண்டில் ஏற்கப்பட்ட செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு
   ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்கு ரொக்கம் செலுத்தியது
3. உரிமையாளரின் சொத்துகள் ரூ. 85,000 மற்றும் பொறுப்புகள் ரூ. 21,000 எனில் அவருடைய முதல் தொகை
   அ) ரூ. 85,000 ஆ) ரூ. 1,06,000 இ) ரூ. 21,000 ஈ) ரூ. 64,000
4. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஒரு
   அ) பெயரளவு கணக்கு ஆ) சொத்து கணக்கு
   இ) ஆள்சார் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு
5. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது
   அ) இலாபம் அல்லது நட்டம் ஆ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு
   இ) உபரி அல்லது பற்றாக்குறை ஈ) நிதிநிலை
6. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை
   அ) வருவாயின வரவு ஆ) முதலின வரவு
   இ) வருவாயினச் செலவு ஈ) முதலினச் செலவு
7. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத நிலையில் நிறுவனத்தின் இலாபம் கூட்டாளிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுவது
   அ) சமமான விகிதத்தில் ஆ) முதல் விகிதத்தில்
   இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ) ஈ) மேற்கூறிய எதுவுமில்லை
8. கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால், அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932-ன்படி வழங்கப்படும் வட்டி வீதம்
   அ) ஆண்டுக்கு 8% ஆ) ஆண்டுக்கு 12% இ) ஆண்டுக்கு 5% ஈ) ஆண்டுக்கு 6%
9. பின்வருவனவற்றில் எது சரியற்ற இணை?
   அ) எடுப்புகள் மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
   ஆ) முதல் மீது வட்டி - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்
   இ) கடன்மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
   ஈ) இலாபப்பகிர்வு - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

10. எடுப்பு மீது வட்டி, முதல் மீது வட்டி மற்றும் ஊதியம் கழித்த பின் உள்ள இலாபம் ரூ. 10,500. கீதா என்ற கூட்டாளி கழிவுக்குப் பின் உள்ள நிகர இலாபத்தில் 5% கழிவு பெற உரியவராயின் கழிவுத் தொகையை கண்டறியவும்.

அ) ரூ. 50 ஆ) ரூ. 150 இ) ரூ. 550 ஈ) ரூ. 500

**II எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். 17 கட்டாயமாக விடையளிக்கவும்.** 5 X 2 = 10

11. முழுமை பெறா பதிவேடுகள் என்றால் என்ன?
12. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?
13. உயில்கொடை என்றால் என்ன?
14. பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் காணவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று முதல் | 40,000 |
| 2019, மார்ச் 31 அன்று முதல் | 50,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல்முதல் | 7,000 |
| அவ்வாண்டில் இலாபம் | 8,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | ? |

15. பின்வரும் விவரங்கள் மார்த்தாண்டம் பெண்கள் பண்பாட்டு மன்றத்தின் இறுதிக்கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக்காட்டவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 1.4.2018 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு | 16,000 |
| அவ்வாண்டில் வாங்கிய விளையாட்டுப் பொருள்கள் | 84,000 |
| 31.3.2019 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு | 10,000 |

16. 2018 ஜனவரி 1 அன்று பேகம் மற்றும் பாத்திமா என்ற கூட்டாளிகளின் முதல் கணக்குகள் முறையே ரூ. 50,000 மற்றும் ரூ. 40,000 இருப்பினைக் காட்டியது. 2018, அக்டோபர் 1 அன்று பேகம் கூடுதல் முதலாக ரூ. 10,000 கொண்டுவந்தார் மற்றும் 2018, மே.1 அன்று பாத்திமா கொண்டுவந்த கூடுதல் முதல் ரூ. 9,000. டிசம்பர் 31, 2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடவும்.

17. சேலம் விளையாட்டு மன்றத்தின் 2019, ஏப்ரல் 1 அன்றைய முதல் நிதியைக் கணக்கிடவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| விளையாட்டு உபகரணங்கள் | 30,000 | பரிசு நிதி | 10,000 |
| கணிப்பொறி | 25,000 | பரிசுநிதி முதலீடுகள் | 10,000 |
| 2018-2019 ஆம் ஆண்டில் சந்தா பெற வேண்டியது | 5,000 | 2019-20 ஆம் ஆண்டிற்காக முன்கூட்டிப் பெற்ற சந்தா | 8,000 |
| கைரொக்கம் | 7,000 | வங்கி ரொக்கம் | 21,000 |

**III எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். 24 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 5 X 3 = 15

18. இரட்டைப்பதிவு முறை மற்றும் முழுமை பெறா பதிவேடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் ஏதேனும் 3 தரவும்.
19. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் 3 தரவும்.
20. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத போது, இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932-ன் படி கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து சிறுகுறிப்பு தரவும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

21. பின்வரும் விவரங்களிலிருந்து அவ்வாண்டில் மேற்கொண்ட மொத்த விற்பனையை கண்டறியவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று கடனாளிகள் | 1,30,000 |
| அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து ரொக்கம் பெற்றது | 4,20,000 |
| விற்பனைத் திருப்பம் | 35,000 |
| வாராக்கடன் | 15,000 |
| 2018, டிசம்பர் 31 அன்று கடனாளிகள் | 2,00,000 |
| ரொக்க விற்பனை | 4,60,000 |

22. பின்வரும் விவரங்ள் ஒரு மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக்கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக்காட்டவும்.

ப 2019, மார்ச் 31-ஆம் ஆண்டிற்குரிய பெறுதல்கள் செலுத்தல்கள் கணக்கு வ

| பெறுதல்கள் | | ரூ. | ரூ. | செலுத்தல்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| சந்தா | 2017-2018 | 10,000 | | | |
| | 2018-2019 | 50,000 | | | |
| | 2019-2020 | 5,000 | 65,000 | | |

மன்றத்தில் உள்ள 200 உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஆண்டு சந்தாவாக ரூ. 400 செலுத்துகின்றனர். 2017-2018 ஆம் ஆண்டில் இன்னும் பெற வேண்டிய சந்தா ரூ. 2,000.

23. காரைக்குடி விளையாட்டு மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக்கணக்குகளில் பின்வருவன எவ்வாறு தோன்றும் எனக்காட்டவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று தொடர் விளையாட்டுப்போட்டி நிதி | 90,000 |
| 2018 ஏப்ரல் 1அன்று தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு | 70,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது | 9,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி நிதிக்கான நன்கொடை | 11,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 60,000 |

24. கவிதா என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ரூ. 2,500 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடப்படவேண்டும். எடுப்புகள் மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் கணக்கிடவும். அவர்

1) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்,
2) ஒவ்வொரு மாத இடையில் எடுத்திருந்தால்
3) ஒவ்வொரு மாத இறுதியில் எடுத்திருந்தால்.

**IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 2 X 5 = 10

25. அ) ராஜு முறையான கணக்கேடுகளைப் பின்பற்றுவதில்லை. அவருடைய பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு.

| விவரம் | 1.1.2018 ரூ. | 31.12.2018 ரூ. |
|---|---|---|
| கை ரொக்கம் | 80,000 | 90,000 |
| சரக்கிருப்பு | 1,80,000 | 1,40,000 |
| கடனாளிகள் | 90,000 | 2,00,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,30,000 | 1,95,000 |
| வங்கிக் கடன் | 1,40,000 | 1,05,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 1,70,000 | 1,70,000 |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

அவ்வாண்டில் அவர் கொண்டுவந்த கூடுதல் முதல் ரூ. 50,000 மற்றும் அவர் வியாபாரத்திலிருந்து தன்னுடைய சொந்த பயனுக்காக மாதந்தோறும் ரூ. 2,500 எடுத்துக்கொண்டார். மேற்கண்ட தகவல்களிலிருந்து இலாப நட்ட அறிக்கை தயாரிக்கவும்.

**(அல்லது)** ஆ) கீழ்க்காணும் திருச்சி மனமகிழ் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018, மார்ச் 31-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கினைத் தயாரிக்கவும்.

| பெறுதல்கள் | ரூ. | செலுத்தல்கள் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு : கைரொக்கம் | 11,000 | அறைகலன் வாங்கியது | 10,000 |
| பங்காதாயம் பெற்றது | 27,600 | வாடகை | 2,800 |
| பழைய செய்தித்தாள் விற்றது | 3,000 | செயலர் மதிப்பூதியம் | 15,000 |
| உறுப்பினர் சந்தா | 31,000 | தபால் செலவுகள் | 1,700 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை | 8,000 | பொதுச்செலவுகள் | 4,350 |
| முதலீடுகள் மீதான வட்டி | 1,250 | அச்சு மற்றும் எழுதுபொருள்கள் | 45,000 |
| அறைகலன் விற்றது | | தணிக்கைக் கட்டணம் | 5,000 |
| (ஏட்டு மதிப்பு ரூ. 4,400) | 5000 | இறுதி இருப்பு : கைரொக்கம் | 3,000 |
| | 86,850 | | 86,850 |

26. அ) பின்வரும் தகவல்களிலிருந்த, பத்மினி மற்றும் பத்மா என்ற கூட்டாளிகளின் முதல் மாறுபடும் முதல் எனக் கொண்டு அவர்களின் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்.

| விவரம் | பத்மினி ரூ. | பத்மா ரூ. |
|---|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் (வரவிருப்பு) | 5,00,000 | 4,00,000 |
| 2018 ஆம் ஆண்டில் எடுப்புகள் | 70,000 | 40,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 2,000 | 1,000 |
| 2018-ல் இலாபப் பங்கு | 52,000 | 40,000 |
| முதல் மீது வட்டி | 30,000 | 24,000 |
| ஊதியம் | 45,000 | - |
| கழிவு | - | 21,000 |

**(அல்லது)** ஆ) கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து மதுரை அன்னை தெரசா மகளிர் மன்றத்தின் 2018, டிசம்பர், 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| ரொக்க இருப்பு (1.1.2018) | 2,000 | சந்தா பெற்றது | 8,500 |
| வங்கி இருப்பு (1.1.2018) | 3,000 | அறைகலன் வாங்கியது | 6,000 |
| பழைய செய்தித்தாள்கள் விற்றது | 500 | தீக்காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 1,500 |
| எழுதுபொருள்வாங்கியது | 6,000 | தணிக்கைக் கட்டணம் செலுத்தியது | 2,000 |
| செய்தித்தாள்கள் வாங்கியது | 700 | அறைகலன்மீதான தேய்மானம் | 900 |
| நுழைவுக்கட்டணம் பெற்றது | 3,000 | போக்குவரத்துச் செலவுகள் | 1,000 |
| பல்வகைச் செலவுகள் | 6,000 | ரொக்க இருப்பு (31.12.2018) | 2,500 |
| உதவித்தொகை அளித்தது | 2,000 | அறைகலன் விற்றது | 4,000 |
| முதலீடுகள் மீதான வட்டி | 2,000 | | |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**+2 கணக்குப்பதிவியல் முதல் இடைப்பருவத்தேர்வு –ஆக 23**

**சரியான விடை** **10 X 1 = 10**

1.(ஆ)சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
2. (இ) அவ்வாண்டில் ஏற்கப்பட்ட செ.மா.சீ
3. (ஈ) ரூ 64000
4. (ஆ) சொத்து கணக்கு
5. (இ) உபரி அல்லது பற்றாக்குறை
6. (ஆ) முதலின வரவு
7. (அ) சமமான விகிதத்தில்
8. (ஈ) ஆண்டுக்கு 6%
9. (இ) கடன் மீது வட்டி – முதல் கணக்கில் பற்று வைக்கவேண்டும்
10. (ஈ) ரூ 500

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X2=10**

11. **முழுமை பெறா பதிவேடுகள்:** இரட்டைப்பதிவு முறையின் படி பராமரிக்கப்படாத பதிவேடுகள் முழுமைபெறா பதிவேடுகள் எனப்படும். இதில் ரொக்க கணக்கு மற்றும் ஆள்சார் கணக்குகள் பதியப்படும்.

12. **கூட்டாண்மை ஒப்பாவணம்:** கூட்டாளிகளிடையேயான எழுத்து வடிவிலான உடன்படிக்கையே கூட்டாண்மை ஒப்பாவணம் ஆகும். இவை கட்டாயம் இல்லை. ஒப்பாவணம் ஆதாரமாக இருப்பதால் ஒப்பாவணம் விரும்பத்தக்கதாகும்.

13. **உயில் கொடை:** ஒருவரின் உயில் மூலமாக இலாப நோக்கமற்ற சங்கங்களுக்கு அளிக்கப்படும் பரிசு உயில் கொடை ஆகும். இது ஒரு முதலின வரவாகும்.

| | |
|---|---|
| 14. இறுதி முதல்<br>**கூட்டுக:- எடுப்புகள்** | 50000<br>**5000** |
| <br>கழிக்க:- கூடுதல் முதல் | 55000<br>7000 |
| சரிக்கட்டப்பட்ட இ.முதல்<br>கழிக்க:- தொடக்க முதல் | 48000<br>40000 |
| இலாபம். | 8000 |

15. **மார்த்தாண்டம் பெண்கள் வருவாய் செலவினக் கணக்கு**

| செலவுகள் | தொ | தொ | வரு | ெ | ெ |
|---|---|---|---|---|---|
| விளையாட்டு பொருள் தொ.இ | 16000 | | | | |
| கூட்:- நடப்பாண்டில் வாங்கி | 84000 | | | | |
| | 10000 | | | | |
| கழி:- விளை.பொ.இறுதி இருப் | 10000 | | | | |
| | | **90000** | | | |

**மார்த்தாண்டம் பெண்கள் இருப்புநிலைக்குறிப்பு**

| பொறுப்பு | | தொ | சொத்துக்கள் | தொ | தொகை |
|---|---|---|---|---|---|
| | | | வி.பொ. இறுதி இ | | 10000 |

**16. பேகத்தின் முதல் மீது வட்டி**

தொடக்க முதல் = 50000 x 4/100 = 2000
கூடுதல் முதல் (3 மாதம்) = 10000 x 4/100X3/12 = <u>100</u>
**<u>2100</u>**

**பாத்திமாவின் முதல் மீது வட்டி**

தொடக்க முதல் = 40000 x 4/100 = 1600
கூடுதல் முதல் (8 மாதம்) = 9000 x 4/100 x8/12 = <u>240</u>
**<u>1840</u>**

17. **சேலம் விளையாட்டு மன்றத்தின் இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை | சொத்துக்கள் | தொகை |
|---|---|---|---|
| முன்கூட்டிப் பெ சந்தா | 8000 | விளை.உபகர | 30000 |
| பரிசு நிதி | 10000 | கணிப்பொறி | 25000 |
| **முதல் நிதி** | **80000** | பரிசு நிதி முத | 10000 |
| | | கை ரொக்கம் | 7000 |
| | | வங்கி ரொக்க | 21000 |
| | | பெ.வே. சந்தா | 5000 |
| | 98000 | | 98000 |

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி : 5X3=15**

| 18. **அடிப்படை** | **இரட்டைப்பதிவு முறை** | **முழுமை பெறா பதிவேடுகள்** |
|---|---|---|
| **நடவடிக்கைகளை பதிவு செய்தல்** | பற்று மற்றும் வரவு இரு தன்மைகளும் பதியப்படும். | சில நடவடிக்கைகள் இரு தன்மைகளும் பதியப்படும். சில நடவடிக்கைகள் பற்று அல்லது வரவு மட்டும் பதியப்படும். |
| **கணக்குகள்** | ஆள்சார், சொத்து மற்றும் பெயரளவு கணக்குகள் பராமரிக்கப்படுகிறது. | ஆள்சார் மற்றும் ரொக்க கணக்குகள் மட்டும் பராமரிக்கப்படுகிறது. |
| **இருப்பாய்வு** | தயாரிக்க முடியும் | தயாரிக்க முடியாது. |
| **இலாப – நட்டம்** | சரியான இலாப நட்டம் தயாரிக்க முடியும் | துல்லியமாக தயாரிக்க முடியாது. |
| **நிதி நிலை** | உண்மையான நிதிநிலை கண்டறிய முடியும். | உண்மையான நிதிநிலை கண்டறிய முடியாது. |
| **பொருந்தும்** | அனைத்து நிறுவனங்களுக்கும் பொருந்தும் | சிறு நிறுவனங்களுக்கு மட்டும் பொருந்தும். |
| **நம்பகத் தன்மை** | அறிவியல் பூர்வமான கணக்கியல் முறை | அறிவியல் தன்மையற்ற முறை |
| **ஏற்புடைய தன்மை** | வருமானவரி அதிகாரிகளுக்கு ஏற்புடையது | ஏற்புடையது இல்லை. |

| 19. **அடிப்படை** | **பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு** | **வருவாய் செலவினக் கணக்கு** |
|---|---|---|
| **நோக்கம்** | ரொக்கம் பெறுதல்கள் செலுத்தல்களை அறிய | உபரி அல்லது பற்றாக்குறையை அறிய |
| **கணக்கின் தன்மை** | சொத்துக் கணக்கு | பெயரளவு கணக்கு |
| **கணக்கின் அடிப்படை** | ரொக்கத்தின் அடிப்படையில் | நிகழ்வின் அடிப்படையில் |
| **தொடக்கம் மற்றும் இறுதி இருப்பு** | ரொக்கம் மற்றும் வங்கி தொடக்க இருப்புடன் தொடங்கிக இறுதி இருப்புடன் முடியும். | உபரி அல்லது பற்றாக்குறையுடன் முடிவடையும். |
| **நடவடிக்கையின் தன்மைகள்** | வருவாயின் முதலின வேறுபாடுகள் இல்லை. | வருவாயின நடவடிக்கைகள் மட்டும் வரும். |
| **காலம்** | கடந்த, நடப்பு மற்றும் எதிர்வரும் ஆண்டு பெறுதல் செலுத்தல்கள் பதியப்படும். | நடப்பு ஆண்டுக்குறிய நடவடிக்கைகள் மட்டும் பதியப்படும். |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**20. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத போது, இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932ன்படி கடைபிடிக்கக் கூடிய விதிமுறைகள்**

கூட்டாளிகளுக்கு உழைப்பு ஊதியம் வழங்கப்பட வேண்டியது இல்லை.

இலாப நட்டங்கள் சமமாக பகிர்ந்து கொள்ள வேண்டும்.

முதல் மீதான வட்டி வழங்கப்பட வேண்டியது இல்லை.

எடுப்பு மீதான வட்டி விதிக்கக்கூடாது.

கடன் மீதான வட்டிக்கு ஆண்டுக்கு 6% அனுமதிக்க வேண்டும்.

**21. மொத்தக் கடனாளிகள் கணக்கு**

| விவரம் | தொகை | விவரம் | தொகை |
|---|---|---|---|
| இருப்புகீ/கொ | 130000 | ரொக்க க/கு | 420000 |
| **விற்பனை க/கு** | **540000** | உள்திருப்பக்க/கு | 35000 |
| | | வாராக்கடன்க/கு | 15000 |
| | | இருப்புகீ/இ | 200000 |
| | 670000 | | 670000 |

**மொத்த விற்பனை =** ரொக்கவிற்பனை+கடன் விற்பனை

460000 + 540000 = **1000000**

**22. 2018-19 ஆண்டின் வருவாய் செலவினக் கணக்கு**

| செ | தொ | தொ | வருமானம் | தொகை | தொகை |
|---|---|---|---|---|---|
| | | | 2018-19 சந்தா | 50000 | |
| | | | **(+) பெ.வே.சந்த** | **30000** | **80000** |

**இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ரூ | தொ | சொத்துக் | | தொகை |
|---|---|---|---|---|---|
| 2019-20 சந்தா மு.பெ | | 5000 | 18-19ல் பெ.சே.சந்தா | | 30000 |
| | | | **17-18 பெ.வே. சந்** | | **2000** |

**23. காரைக்குடி விளையாட்டு இருப்புநிலைக்குறிப்பு**

| பொறுப்புகள் | தொ | தொ | சொத்து | தொ |
|---|---|---|---|---|
| வி போட்டி நிதி தொ | 90000 | | தொடர் | 70000 |
| கூட்:- முதலீடு மீ வட் | 9000 | | வி.போ. | |
| | 99000 | | முதலீடு | |
| கூட்:- வி.போ. நன்கொ | 11000 | | | |
| | 110000 | | | |
| கழி:- வி.போ.செலவு | 60000 | | | |
| | | 50000 | | |

**24. கவிதாவின் எடுப்பு மீது வட்டி**

1) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்

2500 X 12 =30000 x 4/100 x6.5/12 = **650**

2) ஒவ்வொரு இடையில் தொடக்கத்தில் எடுத்திருந்தால்

2500 X 12 = 30000 x 4/100 x6/12 = **600**

3) ஒவ்வொரு மாத இறுதியில் எடுத்திருந்தால்

2500 X 12= 30000 x 4/100 x5.5/12 = **550**

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 3X5=15**

**25 அ) (தொடக்க முதல் கணக்கிடுதல்)**

| பொறுப்புகள் | தொகை | சொத்துக்கள் | தொகை |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 130000 | ரொக்கம் | 80000 |
| வங்கி கடன் | 140000 | சரக்கிருப்பு | 180000 |
| | | கடனாளிகள் | 90000 |
| **முதல்** | **250000** | பொ.இயந்திரம் | 170000 |
| | 520000 | | 520000 |

**இறுதி முதல் கணக்கிடுதல்**

| பொறுப்புகள் | தொகை | சொத்துக்கள் | தொகை |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 195000 | ரொக்கம் | 90000 |
| வங்கி கடன் | 105000 | சரக்கிருப்பு | 140000 |
| | | கடனாளிகள் | 200000 |
| முதல் | 300000 | பொ.இயந்திரம் | 170000 |
| | 600000 | | 600000 |

**இலாப நட்ட அறிக்கை**

| | |
|---|---|
| இறுதி முதல் | 300000 |
| கூட்டுக:- எடுப்புகள் (2500 X 12) | 30,000 |
| | 330000 |
| கழிக்க:- கூடுதல் முதல் | 50000 |
| சரிக்கட்டப்பட்ட இ.முதல் | 280000 |
| கழிக்க:- தொடக்க முதல் | 250000 |
| **இலாபம்** | **30000** |

**25ஆ) திருச்சி மனமகிழ் மன்றம் வருவாய் செலவினக் கணக்கு**

| செலவுகள் | தொகை | வருமானம் | தொகை |
|---|---|---|---|
| வாடகை | 2800 | பங்காதாயம் பெற் | 27600 |
| செயலர்மதிப்பூதிய | 15000 | ப.செய்தித்தாள் வி | 3000 |
| தபால் செலவுகள் | 1700 | உறுப்பினர் சந்தா | 31000 |
| பொதுச் செலவுகள் | 4350 | பா.பெட்டக வாடகை | 8000 |
| அச்சு ம எழுது | 45000 | முதலீடுகள் மீது வ | 1250 |
| தணிக்கை கட்டண | 5000 | அறைகலன் லாபம் | 600 |
| | | **பற்றாக்குறை** | **2400** |
| | **73850** | | **73850** |

**26அ) பத்மினி பத்மா என்னும் கூட்டாளிகளின் முதல் க/கு**

| நாள் | விவரம் | அருண் | செல் | நாள் | விவரம் | அருண் | செல் |
|---|---|---|---|---|---|---|---|
| | எடுப்பு | 70000 | 40000 | 1.1.18 | இகீ/கெ | 500000 | 400000 |
| | எடு.வட் | 2000 | 1000 | | லாபம் | 52000 | 40000 |
| டி18 | இகீ/இ | 550000 | 444000 | | முமீவட் | 30000 | 24000 |
| | | | | | சம்பளம் | 45000 | |
| | | | | | கழிவு | | 12000 |
| | | 627000 | 485000 | | | 627000 | 485000 |
| | | | | 1.1.19 | **இகீ/கொ** | **555000** | **444000** |

**26.ஆ) மதுரை அன்னை பெறுதல் செலுத்தல் கணக்கு**

| பெறுதல்கள் | | தொ | செலுத்தல்கள் | தொ |
|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | எழுதுபொ.வா | 6000 |
| கை ரொக்கம் | 2000 | | தணிக்கை கட் | 2000 |
| வங்கி | 3000 | 5000 | பல்வகை செல | 6000 |
| ப.செய்தி தாள் வி | | 500 | உதவி தொ.அ | 2000 |
| நுழைவு கட்டணம் | | 3000 | தீ.கா.முனைமம் | 1500 |
| மு.மீதான வட்டி | | 2000 | அறைகலன் வா | 6000 |
| சந்தா பெற்றது | | 8500 | செய்திதாள் வா | 700 |
| அறைகலன் விற் | | 4000 | போக்குவர செ | 1000 |
| **வ.மே.பற்று** | | **4700** | இருப்பு கீ/இ | |
| | | | ரொக்கம் | 2500 |
| | | **27700** | | **27700** |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com